# IN THE COURT OF ADDITIONAL DISTRICT JUDGE, TENKASI.

**Date : 16.02.2026**

**OS No. : 356/2021**
**Pw : 1**

**Name : திருமதி. ஜெஸிந்தா**

சாட்சி இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்குவிசாரணை செய்ய அனுமதிக்கப்படுகின்றார்.

**2, 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

பிராது தபசில் சொத்துக்கள் அனைத்தும் சூசை மரியான் என்பவரது பூர்வீக சொத்துக்கள் என்றால் சரிதான். சூசை மரியான் ஏற்படுத்திக்கொண்ட வாய்மொழியான குடும்ப ஏற்பாடானது எந்த வருடம் செய்யப்பட்டது என்ற விவரம் பிராதில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான், ஆனால் அதன் அடிப்படையில் 1988ம் வருடம் ஒரு ஏற்பாடு ஆவணம் பிறப்பித்துக் கொள்ளப்பட்டது. சொத்து சம்பந்தமாக எனக்கும் 1ம் பிரதிவாதிக்கும் இடையே தாவா இருப்பதாக சொல்லி எந்த பத்திரமும் தபசில் சொத்து குறித்து பதிவுசெய்யக்கூடாது என 2, 3 பிரதிவாதிகளுக்கு நான் புகார் அனுப்பவில்லை என்றால் சரிதான். 1ம் பிரதிவாதிக்கு தாவா சொத்தை பொறுத்து பாக விடுதலை ஆவணம் எழுதிக்கொடுத்த நபர்களை இவ்வழக்கில் நான் கட்சி சேர்க்கவில்லை என்றால் சரிதான். 1ம் பிரதிவாதியுடன் பாக விடுதலை ஏற்படுத்திக்கொண்ட ஜோஸ்பின் மார்கரேட் என்ற நபரை நான் கட்சி சேர்க்கவில்லை என்றால் சரிதான். கூட்டுப்பட்டாவின் அடிப்படையில்தான் பாக விடுதலை ஆவணங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன என்றால் சரிதான். தவறான முறையில் பத்திரம் பதிவுசெய்யப்பட்டுள்ளதாக குறிப்பிட்டு 2, 3 பிரதிவாதிகளுக்கு நான் புகார் மனு அனுப்பவில்லை என்றால் சரிதான். பதிவு சட்ட விதிகளின்படிதான் மேற்படி

விடுதலை ஆவணங்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளன என்று சொன்னால் சரியல்ல.

தாவா சொத்துக்கள் அனைத்தும் எனது குடும்ப சொத்துக்கள் என்றும், அதுகுறித்து நான் பாகப்பிரிவினை வழக்குதான் தாக்கல் செய்யவேண்டும் என்றும், விளம்புகை பரிகாரம் கோரி தாக்கல் செய்ய இயலாது என்றால் சரியல்ல. 2, 3 பிரதிவாதிகளை பொறுத்து இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

**மறு விசாரணைஇல்லை.**